முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS.99/2008** **PW: 1** **17.04.2024**

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய ஞானம் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.T.நித்யகலா, B.Com., B.L., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.ஞானம் | வயது | 60 |
| த/க. பெயர் | நடராஜன் | தொழில் | கூலிவேலை |
| ஜாதி | | கிராமம் | போத்திரமங்கலம் |
| வட்டம் | | மாவட்டம் | |

**குறுக்கு விசாரணை**

1. நீங்கள் பிறந்தது என்ன ஊர் என்றால் போத்திரமங்கலம். வழக்கு சொத்து சின்னசாமிக்கு அரசால் பட்டா கொடுத்த சொத்து என்றால் சரிதான். சின்னசாமி மனைவி பெயர் என்னவென்றால் அஞ்சலை. சின்னசாமி, அஞ்சலைக்கு பிறந்தவர் கலாராணி என்றால் இல்லை. ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் வளர்மதி இதே சொத்து குறித்து உங்கள் பெயரிலும், உங்கள் கணவர் பெயரிலும் வழக்கு போட்டார் என்றால் சரிதான். அந்த வழக்கில் சின்னசாமிக்கும், அஞ்சலைக்கும் பிறந்தவர்தான் கலாராணி என்பதை ஒப்புக்கொண்டுள்ளீர்கள் என்றால் தேவகி என்ற கலாராணி என்பதைதான் ஒப்புக்கொண்டுள்ளேன்.

2. உங்கள் மாமனார் பெயர் என்னவென்றால் செல்லமுத்து. அவருடைய முதல் மனைவி ராஜாம்பாள் என்றால் சரிதான். செல்லமுத்துவிற்கும், ராஜாம்பாளுக்கும் சுந்தரம், பாப்பாள், நடராஜன், பரமசிவம் ஆகியோர்கள் பிள்ளைகள் என்றால் சரிதான். நடராஜனின் முதல் மனைவி வசந்தா என்றால் சரிதான். நடராஜன், வசந்தாவிற்கும் பிறந்தவர் சுமதி என்றால் சரிதான். நீங்கள் நடராஜனின் இரண்டாவது மனைவி என்றால் சரிதான். செல்லமுத்துவின் இரண்டாவது மனைவி பெயர் சரஸ்வதி என்றால் சரிதான். அந்த செல்லமுத்துவிற்கும், சரஸ்வதிக்கும் இந்திராணி,

சித்திராங்கி, ராமச்சந்திரன் பிள்ளைகள் என்றால் சரிதான். சின்னசாமி இறந்தவுடன் அவருடைய மனைவி அஞ்சலை செல்லமுத்து என்பவருடன் குடும்பம் நடத்தினார் என்றால் இல்லை. சின்னசாமி எந்த வருடம் இறந்தார் என்றால் தெரியாது. சின்னசாமி இறந்ததற்கு பிறகு அஞ்சலையும் செல்லமுத்துவும் குடும்பம் நடத்தியதால் பிறந்தவர் அமுதா என்றால் சரியல்ல. அமுதா கணவர் பெயர் முருகேசன் என்றால் சரிதான். சின்னசாமிக்கு கலாராணி மட்டும்தான் வாரிசு என்றாலும் அமுதா வாரிசு இல்லை என்றாலும் சரியல்ல. அஞ்சலை வயிற்றில்தான் அமுதா பிறந்தார். அமுதா எப்போது பிறந்தார் என்றால் தெரியாது.

3. ராமச்சந்திரன், முருகேசன் ஆகியோர்களுக்கும் உங்களுக்கும் விரோதமா என்றால் இல்லை. அமுதா எழுதிக்கொடுத்ததாக சொல்லப்பட்ட ஆவணம் உண்மை இல்லை என்றாலும், அதன் பேரில் பெற்ற கிரயம் செல்லாது என்றாலும் சரியல்ல. பிழைதிருத்தல் பத்திரம் அமுதா, கலாராணியால் எழுதப்பட்டதல்ல என்றால் சரியல்ல. நேரடியாக வந்து எழுதிக்கொடுத்தார்கள். இந்த வழக்கில் அசல் பத்திரத்தையும் வீட்டு வரி ரசீதுகளையும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்கும், இதே தரப்பினர்களுக்கிடையே இதே சொத்தைப் பொறுத்துதான் என்றால் சரிதான். S.A.1512/2011 என்ற மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதனால் ஒரே சொத்தைப் பொறுத்து அதே நபர் மீது வேறு வழக்கு நிலுவையில் உள்ளதால் இவ்வழக்கு ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த சொத்தை விற்க விடாததால் வழக்கு போட்டேன்.

4. வழக்கு சொத்தில் தற்போது வீடு உள்ளதா என்றால் இல்லை. அதில் காட்டுக்கருவை முள் முளைத்துள்ளதா என்றால் உள்ளது. அந்த இடத்தில் நீங்கள் குடியிருந்து வருவதாக வழக்கில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் குடியிருந்தோம். வீடு சேதமானதால் வேறு வீட்டிற்கு சென்றுவிட்டோம். எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை அங்கு குடியிருந்தீர்கள் என்றால் 35 வருடங்களாக குடியிருந்தேன். வீடு இடிந்து 10 வருடங்களாகிறது. முதலில் இந்த நீதிமன்றத்தில் வழக்கு முடிந்து அந்த வீடு எத்தனை வருடங்களாக இருந்தது என்றால் 4 வருடங்களாக இருந்தது. அந்த காலங்களுக்கான வீட்டு வரி ரசீது உள்ளதா என்றால் உள்ளது. இந்த வழக்கு போடும்போது வீடு இருந்ததா என்றால்

அந்த வீட்டில்தான் குடித்தனம் இருந்தோம்.

5. வழக்கு போட்டபிறகு மனு எண்.95/2009 ல் போலிஸ் உதவி வேண்டும் என்று ஒரு மனு கொடுத்தீர்கள் என்றால் சரிதான். அந்த மனுவில் வீடு கட்டுவதற்கு எதிர்மனுதாரர் தடை செய்யக்கூடாதென கூறியுள்ளீர்கள் என்றால் இல்லை. மரம் வெட்டக்கூடாது என்று போட்டேன். இந்த வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் வீடு இல்லை என்றால் சரியல்ல. அந்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. அடிக்கணக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் வீடு இல்லாததால் நீங்கள் அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்கு பக்கத்தில் எதிர்வாதி வீடு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தையும் எதிர்வாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. உங்கள் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(Sd/Nithyakala)**
**Principal District Munsif,**
Tittagudi.